மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது என்று 41 (3) விதியின்கீழ் உள்ள தடையை இன்று தளர்த்த வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

4. கவன ஈர்ப்பு.

(i) பல்தொழிற் பள்ளிகளிலிருந்து விலக்கப்பட்ட ஆசிரியர்களின் நிலை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் கல்வி, தொழிலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Sir, I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, namely the plight of the Lecturers in Polytechnics who have been retrenched much against their conditions of service.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே 1957 நவம்பர் 14-ம் தேதிக்கு முன்பு பல்தொழிற் பள்ளிகள தொழில் வணிகத் துறை இயக்குநர் ஆளுகையில் இருந்த வந்தன. அரசாங்கப் பல்தொழிற் பள்ளிகளில் உள்ள சில பதவிகள் அப்போது தமிழகத் தொழிற் பணியிலும், தமிழகத் தொழில் சார்நிலைப் பணியிலும் சேர்க்கப்பட்டிருந்தன. சில பதவிகள் எந்த விதிகளின் கீழும் வரவில்லை. 1957 நவம்பர் 14-ம் நாளிலிருந்து தொழில் நுட்பக் கல்வித் துறை அமைக்கப் பட்டதன் விளைவாக மேற்சொன்ன துறையின் எல்லாப் பதவிகளுக்கும் தனித்தனிப் பணி விதிகளை இயற்றும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிர்பார்த்தவாறு இவ்விதிகளை உரிய காலத்தில் இறுதி செய்ய இயலவில்லை. ஆகவே, பல்தொழிற் பள்ளிகளில் உள்ள பல்வேறு பதவிகளுக்காகத் தனி விதிகள் இயற்ற முடிவு செய்யப்பட்டது. பெரும்பான்மையான பதவிகள் தமிழக அரசின் அலுவலர் தேர்வுக் கழகத்தின் ஆளுகையில் கொண்டு வரப்பட்டன. இதற்கெனத் தனி விதிகள் இயற்றப்படுகிற வரையில், (விரிவுரையாளர்கள் உட்பட) பல்தொழிற் பள்ளிகளில் உள்ள எல்லாப் பதவிகளுக்கும் அவசர கால விதித் துறைகளின் கீழ் தொடர்ந்து நியமனங்கள் செய்யப்பட்டு வந்தன.

கல்லூரிக் கல்வித்துறை பின்பற்றி வரும் நடைமுறையை ஒட்டி, அவசர கால விதித்துறைகளின் கீழ் நியமிக்கப்பட்டவர்களின் பணிகள் 1967-68 கல்வி ஆண்டின் முடிவில் தொழில் நுட்பக் கல்வி இயக்குனரால் நீக்கப்பட்டன. ஆனால் அவர்கள் அனைவரும் 1968-69 கல்வி ஆண்டின் தொடக்கத்தில் மீண்டும் நியமிக்கப் பட்டனர். 1968-ம் ஆண்டு கோடை விடுமுறையின் போதும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டது. தமிழக அரசு அலுவலர் தேர்வுக் கழகத்தால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே, அவர்கள் முறையாகப் பணியில் சேர்த்துக் கொள்ளப் படுவர்.

பெரும்பான்மையான தாற்காலிகப் பதவிகளுக்குத் தனி விதிகள் இப்போது இயற்றப்பட்டுள்ளன. அவ்விதிகளை ஒட்டி, தாற்காலி நியமனங்களை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1968 ஆகஸ்ட் 26]

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : பாலிடெக்கினிக் பள்ளிகளிலே அதிகமான மாணவர்கள் சேராததனலே பல ஆண்டுகாலமாக சர்வீஸிலிருந்த உபாத்தியாயர்கள் இன்கிரிமெண்ட் பெற்றும் அவர்கள் வேலையிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள். மறுபடியும் அவர்களை சேர்த்து அவர்களுடைய இன்கிரிமெண்டை கவனியாமல் " பேசிக் பேயைத் " தான் அவர்களுக்கு இப்பொழுது அளித்து வருகிறார்கள். ஆகையால், அவர்களுக்கு நியாயம் கொடுக்க வேண்டும். மேலும், அவர்கள் எங்கு வேலை பார்த்தார்களோ அங்கே குடும்பத்தையும் நடத்தி வருகிறார்கள். ஆகவே, அவர்கள் எங்கு வேலை பார்த்தார்களோ அங்கேயே அவர்களுக்கு வேலை கொடுக்கும் முயற்சியை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாணவர்கள் குறைந்து விட்டதன் காரணமாக தொழிற் பயிற்சி பள்ளிகளிலிருந்து யாரும் வேலை நீக்கம் செய்யப்படவில்லை. ஆனால், சர்வீஸ் கமிஷனால், தாற்காலிக ஆசிரியர்களைத் தொடர்ந்து வைக்கக் கூடாது என்றும் பள்ளி இறுதி ஆண்டிலே நீக்கப்பட்டு மறுபடியும் சேர்க்கப்படலாம் என்றும் சொல்லப்பட்டது. அந்த அடிப்படையிலே தான் பள்ளி இறுதி ஆண்டின்போது அவர்கள் நீக்கப்பட்டார்கள். நீக்கப்பட்டார்களே தவிர, கோடை விடுமுறை சம்பளம் முழுவதும் தரப்பட்டது—முறைபடி. கோடை விடுமுறை முடிந்ததும் மறுபடியும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். சம்பளத்தைப் பொறுத்தவரையிலும் அவர்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை. தாற்காலிகமாக இருப்பவர்களை முறைப் படுத்துவதற்கு இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படை வருகின்றபோது இனிமேல் இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்பட வழி இருக்காது.

(ii) இராமநாதபுரம் மாவட்டத்தில் குடும்பக் கார்டு மூலம் அளித்து வந்த உணவுப் பொருள்களின் அளவைக் குறைத்ததால் மக்களின் நிலை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு ஏ. அ. சுப்பாராஜா அவர்கள் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. ஏ. அ. சுப்பாராஜா : தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ்,

" இராமநாதபுரம் ஜில்லாவில் குடும்பக் கார்டுகளுக்கு ஏற்கனவே அளித்து வந்த 1 யூனிட்டுக்கு 1,200 கிராம், 1,000 கிராமாகக் குறைக்கப்பட்டதை முன்னிட்டு கஷ்டப்படுகின்ற மக்களின் நிலைபற்றிய " அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், சட்டபூர்வப் பங்கீட்டுப் பகுதிகளில் நபர் ஒன்றுக்கு வாரமொன்றுக்கு 1,400 கிராம் அரிசி வழங்கப்படுகிறது. சட்டபூர்வமற்ற பங்கீட்டுப் பகுதிகளில் அதிக பட்சம் ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு 1,200 கிராம் அரிசி வழங்கப்படுகிறது. ஆனால் மாவட்ட ஆட்சியாளர்கள் அவ்வப்போது மக்கள் தேவைக் கேற்றபடியும் வெளிச்சந்தையில் அரிசி கிடைக்கும் நிலைமையைக் கவனத்திற் கொண்டும் வழங்கப்படும் அளவை மாற்றுகின்றனர். மேலும் அவர்கள் உணவுப் பொருள்கள் கையிருப்பு அளவை மனதில் கொண்டு கார்டுகளுக்கு வழங்கும் அரிசி, கோதுமை இவற்றின் அளவை கூட்டியோ, குறைத்தோ வழங்கலாம். எனவே சட்டபூர்வமற்ற பங்கீடு முறை அமுலிலுள்ள எல்லா இடங்களிலும் ஒரே அளவு உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதில்லை.